## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.431** **நாள்: 31.08.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் நடைபெற்று வரும் முன்னெச்சரிக்கைப் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தொடர்புடைய சேவைத்துறை அலுவலர்களுடன் இணைந்து இன்று ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் நடைபெற்று வரும் முன்னெச்சரிக்கைப் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், நீர்வளத்துறை உள்ளிட்ட தொடர்புடைய சேவைத்துறை அலுவலர்களுடன் இணைந்து இன்று (31.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. டி.ஆனந்த் இ.ஆ.ப., சோழிங்கநல்லூர் மண்டல கண்காணிப்பு அலுவலர் திரு. டி. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மற்றும் தொடர்புடைய சேவைத் துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட ரேடியல் சாலை முதல் பெருங்குடி குப்பைக் கிடங்கு வரையிலான நெடுஞ்சாலைதுறையின் சாலைப் பகுதியில் உள்ள சதுப்பு நிலப்பகுதியில் உள்ள நீர் எளிதில் வெளியேறும் வகையில் ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணி மற்றும் இந்த சாலையில் உள்ள 17 கல்வெர்ட்டுகளின் வழியே மழைநீர் தங்குதடையின்றி பக்கிங்ஹாம் கால்வாயில் செல்லும் வகையில் ஆகாயத்தாமரைகளை அகற்றி வண்டல்கள் தூர்வாரிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ரேடியல் சாலையில் உள்ள பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தின் சாலைப் பகுதியில் உள்ள மழைநீர் வெளியேறுமிடத்தில் சரிந்துள்ள மண் மேடுகளை அகற்றி தண்ணீர் எளிதில் செல்லும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட துரைப்பாக்கம், ஓ.எம்.ஆர். சாலைப் பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகள் நடைபெறும் இடத்தில் மழைநீர் வடிகால் இணைப்பு பணிகளை மேற்கொள்வது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து மேற்கொள்வது தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். ஒக்கியம் மடுவு கால்வாயினைப் பார்வையிட்டு, இக்கால்வாயில் மழைநீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில் பணிகளை மேற்கொண்டு விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சோழிங்கநல்லூர் மண்டலத்தில், வார்டு-198ல் செம்மொழிச் சாலையில், உள்ள அரசன் கழனி கால்வாயினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கால்வாயில் மழைநீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில் மண்மேடுகளை அகற்றிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலம். வார்டு-199, சோழிங்கநல்லூர் சந்திப்பு சாலை மற்றும் டி.என்.எச்.பி.'ஏ' சாலையில், மழைநீர் வடிகால் பணியினை முன்னிட்டு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் குடிநீர்க் குழாயினை மாற்றியமைத்தல் தொடர்பாக சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. டி. ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இப்பணிகளை விரைந்து மேற்கொண்டு முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**